**Date.13.02.2026.**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**

விழுப்புரம்**.**

**OS.108/2017**

வா**.**சா**. 2**

பெயர்**.** திரு**.** ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>**1, 2** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:-**</u>

என்னை சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணை எங்கே என்றால் அதை நீதிமன்றத்தில் கொடுத்து விட்டேன். அந்த அழைப்பாணையில் எதற்காக சாட்சி சொல்ல வர வேண்டும், என்ன தெரிவிக்க வேண்டும் என்ற விவரம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். இன்று என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல யார் அழைத்தார்கள் என்றால் இன்று எங்களது வழக்கு என்பதால் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வழக்கு யார் யார் பெயரில் போட்டு உள்ளார்கள் என்றால் தேவி என்பவர் அவரது அப்பா பெயரில் சொத்து கேட்டு வழக்கு போட்டுள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சொத்து வேண்டும் என்று கேட்டுள்ளார். எனக்கு வழக்கின் விவரங்களை எனது மாமா சொல்லியுள்ளார். எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. அதற்கான நான்கு புற

எல்லைகள் குறித்து எனக்கு தெரியாது. வழக்கில் யார் யார் எதிர் தரப்பினர்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தேவி போட்ட வழக்கிற்கு எனது மாமா என்ன பதில் சொல்லி போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு மொத்தம் 5 பெண்கள் மற்றும் 1 மகன் உள்ளார்கள். நான் ஒன்றாம் பிரதிவாதியின் மைத்துனர் மற்றும் மருமகன் ஆவேன். நான் ஒன்றாம் பிரதிவாதியின் இரண்டாவது மகள் ஜெயந்தியை திருமணம் செய்துள்ளேன். திருமணத்தின் போது எனது மாமனார் அனைவருக்கும் சுமார் 25 சவரன் நகை போட்டுள்ளார் என்றால் இதுவரையில் எத்தனை சவரன் நகைகளை போட்டுள்ளார் என்று எனக்குத் தெரியாது. தேவி தாக்கல் செய்த இந்த வழக்கில் எனது மனைவி ஜெயந்தி ஒரு தரப்பினர் என்றால் சரிதான். 5 பேரும் பார்ட்டிகள் தான் என்றால் சரிதான். நகை போட்டது மட்டுமல்லாமல் ஒன்றாம் பிரதிவாதி மகள்களுக்கு வீடு கட்டவும் பணம் கொடுத்து உதவி செய்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. நான் வழுதரெட்டியில் வாடகைக்கு குடியிருந்து பிறகு எனது மாமனார் வீட்டிற்கு பக்கத்தில் வீடு கட்டி ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு குடும்பம் வந்து விட்டேன் என்றும் அதற்கும் எனது மாமனார் தான் பண உதவி செய்தார் என்றால் சரியல்ல. நான் பணம் வாங்கவில்லை. ஒன்றாம் பிரதிவாதி தனது மகள்களுக்கு எத்திராஜ் நகரில் சுமார் 22 x 86 = 1892 சதுர அடி நிலத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு எழுதி வைத்துள்ளதாக சொல்கிறார்கள். இன்னும் எங்களது கைக்கு வரவில்லை. அந்த சொத்தை வாதி வேறு ஒருவருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால், அவ்வாறு விற்றதாக கேள்விப்பட்டேன். 1ம் பிரதிவாதி எழுதி வைத்த சொத்துக்களை அவரவர்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றும் தற்போது வழக்கிற்காக அந்த பத்திரம் எதுவும் எங்களிடம் வரவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது பிள்ளைகளுக்கிடையில் 03/08/2010 தேதியில் ஒரு பாக அட்டவணை ஏற்பட்டது

என்று சொன்னால், பாக அட்டவணை எதுவும் ஏற்படவில்லை. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் பாகப்பிரிவினை பத்திரம் என்று போடப்பட்டுள்ளது. அந்த ஆவணம் எனது மாமனார் ராஜாமணி, அவரது மகன் கோபாலகிருஷ்ணன், தேவி, ஜெயந்தி, ஞானேஸ்வரி, பிருந்தா, கீதா, ஆகிய அனைவருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் அனைவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள். ஆனால் இது குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். இதற்குப் பிற்பாடு மகள்கள் அனைவரும் சேர்ந்து 1 ம் பிரதிவாதி ராஜாமணிக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார்கள் என்றால், விடுதலை பத்திரம் எதுவும் எழுதித்தரவில்லை. என் மனைவி ஜெயந்தி உட்பட யாரும் இந்த வழக்கில் ஆஜராகாமல் நடத்தாமல் விட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தேவி என்பவர் பாகம் எல்லாம் பிரிந்து சொத்து கொடுத்தவுடன், தற்போது மீண்டும் ஏதாவது பாகம் கிடைக்கும் என்பதால் பொய்யான விவரங்களை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், நானும் எங்களுக்கு ஏதாவது பாகம் கிடைக்கும் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த விவரம் தெரிந்து நாங்கள் அனைவருமே வழக்கு விவரம் தெரிந்து ஏதாவது சொத்து கிடைக்கும் என்பதால் ஆஜராகாமல் விட்டு விட்டோம் என்றால் சரியல்ல. உறவு வேண்டும் என்பதால்தான் மற்றவர்கள் யாரும் வரவில்லை. இந்த விவரத்தையும் நான் வழக்கிற்காக பொய்யாக தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:-**

இல்லை**.**